# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 27 வெள்ளிக்கிழமை (12-9-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 275


# புதூர், ஒட்டுசுட்டான் பகுதிகளில் படையினர் - புலிகள் கடும் சண்டை!

## கனரக வாகனங்கள், டாங்கிகள் சகிதம் முன்னேறுவதற்கு முயற்சி!!

வவுனியா, செப்ரெம்பர் 12

**நேற்று முன்தினம் தமது படை நடவடிக்கையை மீண்டும் ஆரம்பித்த "வெற்றி உறுதி" ராணுவ நடவடிக்கைத் துருப்பினர் புதூரிலும், ஒட்டுசுட்டானிலும் விடுதலைப் புலிகளுடன் கடும் சண்டையில் ஈடுபட்டிருப்பதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

படையினர் கனரக வாகனங்கள், டாங்கிகள் சகிதம் விமானப் படையின் உதவியுடன் தமது நகர்வை நேற்று முன்தினம் ஆரம்பித்திருந்தனர்.

55 ஆவது படையணி புளியங்குளத்திலிருந்து புதூர் வரையும் —

53 ஆவது படையணி நெடுங்கேணியிலிருந்து ஒட்டுசுட்டான் பகுதி வரையும் நேற்று நகர்வை மேற்கொண்டிருந்தன.

நேற்று அதிகாலை 12-30 மணி அளவில் புதூர் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 40 படையினர் உயிரிழந்ததாகவும்-

17 படையினரின் சடலங்களைத் தாம் கைப்பற்றியதாகவும் ''புலிகளின் குரல்'' வானொலி நேற்று இரவு தெரிவித்தது.

எனினும் படையினர் தரப்பில் 12 பேர் மட்டுமே இறந்ததாக ராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கா நேற்றுத் தெரிவித்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் 25 பேர் இழப்பு

வவுனியா, செப். 12

புதன்கிழமையும் வியாழக்கிழமையும் ''வெற்றி உறுதி'' ராணுவத்தினருடன் நடத்திய சண்டையில் 25 விடுதலைப் புலிகள் களப்பலியானதாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்று இரவு தெரிவித்தது.

படையினர் தமது நகர்வை மீண்டும் ஆரம்பித்த முதல் நாள் புதன்கிழமை 12 புலிகளும் இரண்டாவது நாளான நேற்று அதிகாலை புதூரில் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 13 புலிகளும் களப்பலியானதாக 'புலிகளின் குரல்' வானொலி மேலும் தெரிவித்தது:

புதூரில் நடத்தப்பட்ட தாக்குதலில் பத்து ஏ. கே. எல் எம். ஜி, 57 துப்பாக்கிகள் மற்றும் இராணுவ தளபாடங்கள் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-164-3)

## ஆனையிறவு முகாமிலிருந்து படையினர் ஷெல் வீச்சு

### கிளிநொச்சிப் பகுதியில் இருவர் பலி!

வவுனியா, செப். 12

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.15 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களில் இருவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது

கல்மடு, இராமநாதபுரம் பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகவும் –

கல்மடுவில் வீழ்ந்த ஷெல்லுக்கே இருவர் உயிரிழந்ததாகவும்—தெரிவிக்கப்பட்டது.

முத்துலிங்கம் ஆனந்தராசா (22 வயது) என்பவரும் அடையாளம் காணப்படாத மற்றுமொருவருமே உயிரிழந்தனர்.

பலர் காயமடைந்தனர். (இ 3-164)

## முன்னணிக் காவலரண்களுக்கு அனுருத்த நேற்று விஜயம்

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று புளியங்குளத்தில் உள்ள படையினரின் முன்னணிக் காவலரண்களுக்கு விஜயம் செய்தார்.

அடுத்த இராணுவ நடவடிக்கை குறித்து அவர் அங்கு பணிப்புரை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் அனுருத்த ரத்வத்தையும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌஸியும் வவுனியாவில் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று அப்பகுதிகளில் வீதிகளை புனரமைப்பது தொடர்பாக ஆராய்ந்தனர். (இ-21-3)

## யுத்த நிறுத்தம் கோரி மட்டக்களப்பில் பேரணி

### பொது அமைப்புக்கள் ஏற்பாடு

மட்டக்களப்பு, செப். 12

உடனடியாக யுத்த நிறுத்தம் கொண்டு வருமாறும்— பேச்சு மூலம் அரசியல் தீர்வு காணுமாறும் — கோரி மட்டக்களப்பில் எதிர்வரும் திங்கட்கிழமை பேரணி ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

மட்டக்களப்பில் இராணுவக் சட்டுப்பாட்டில் இல்லாத கொக்கட்டிச் சோலைப் பகுதியில் இந்தப் பேரணி நடத்தப்படவிருக்கிறது.

கொக்கட்டிச்சோலை சிவன் கோயிலில் இருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணி பட்டிப்பளை பிரதேச செயலகம் வரை நடத்தப்படும்.

அங்கு தமது கோரிக்கையை வலியுறுத்தி மகஜர் ஒன்றை மக்கள் கையளிப்பர்.

பொது அமைப்புக்கள் இந்தப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளது.

(இ-21-3)

## கப்பல்களை விலகிச் செல்லுமாறு காப்புறுதி நிறுவனம் அறிவுறுத்து

### தாக்கப்போவதாக புலிகள் மீண்டும் எச்சரிக்கை

லண்டன், செப். 12

கப்பல்களுக்கு காப்புறுதி அளிக்கும் ''இன்ஸ்ரிரியூட் ஒவ் லண்டன் அண்டரைட்டர்'' என்னும் நிறுவனம் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குக் கரையில் இருந்து கப்பல்களை விலகியிருக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

கடந்த 2 மாத காலத்தில் பன்னாட்டுச் சரக்குக் கப்பல்களில் இரண்டின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லண்டனில் உள்ள கடல் பயண காப்புறுதித் தரகர்கள் பலரின் சார்பாகச் செயற்படும் இந்த நிறுவனம் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குக் கரைகளை போர் அபாயம் கொண்ட பகுதி என அறிவித்துள்ளது.

எனவே இந்தப் பகுதிகளுக்குள் நுழையும் சரக்குக்கப்பல்களுக்கான காப்பீட்டுக் கட்டணம் இன்னதென ஓர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நேற்று கிரனேட் குண்டுவெடிப்பு

### அலுவலகப்பொறுப்பாளர் உயிரிழந்தார்

கொழும்பு, செப். 12

ஈ. பி. டி. பி. அமைப்பின் கொழும்பு தலைமை அலுவலகத்தில் நேற்றுக் காலை 10.45 மணியளவில்கிரனேட் குண்டு ஒன்று வெடித்த சம்பவத்தில் அலுவலகப் பொறுப்பாளர் உயிரிழந்தார்.

அலுவலகப் பணியில்அவர் ஈடுபட்டிருந்த சமயம் திடீரென குண்டு வெடித்தது.

அலுவலகப் பொறுப்பாளரான ராஜி என அழைக்கப்படும் மட்டக்களப்பு கல்லாறு வாசியான தம்பிராசா வடிவேல் (32 வயது) படுகாயமடைந்து உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் உயிர் பிரிந்தது.

இச்சம்பவத்தையடுத்து சம்பவ இடத்தை புகைப்படம் எடுக்கவோ, வீடியோ எடுக்கவோ பத்திரிகையாளர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

''இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெறுகிறது. விசாரணை முடிந்த பின்பே அபிப்பிராயம் கூற முடியும்'' என்று ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம் யாழ். மாவட்டத்தில் உள்ள ஈ. பி. டி. பி. அமைப்பின் அலுவலகங்களில் இவரின் மரணத்துக்கு துக்கம் அனுஷ்டிக்கும் வகையில் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

(இ-21-3)

## சீனக் கப்பலை சிங்கப்பூருக்கு இழுத்துச் செல்ல முயற்சி

புல்மோட்டைப் பகுதியில் தாக்கப்பட்ட சீன சரக்குக் கப்பலை இரு இழுவைப் படகுகளின் உதவியுடன் சிங்கப்பூருக்கு இழுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அந்த கப்பல் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கப்பலின் நிலை குறித்து நேரில் ஆராய சீனாவில் இருந்து கொழும்பு வந்த இரு பொறியியலாளர்கள் இன்று புல்மோட்டைக்கு செல்லவிருக்கின்றனர்.

அக்கப்பலில் ஏற்றப்பட்டுள்ள 26 ஆயிரத்து 235 மெற்றிக் தொன் இல்மைனைட்டை வேறு கப்பலுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கப்பல் மாலுமிகளான 32 பேரில் 5 மாலுமிகள் தொடர்பாக இன்னும் தகவல் இல்லை என்றும்—

உயிர்தப்பிய 26 ஊழியர்களும் ஹபரணவில் ஹோட்டல் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

அக்கப்பல் 40 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியானது என மதிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று மாலை வரை கப்பலுக்குள் போக முடியாத அளவு வெப்ப நிலை இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிவான நன்றிகள்

02 - 09 - 1997 தொண்டமனாறு செல்வச்சந்நிதி தேவஸ்தானத்தினரும், அன்பர்கள், நண்பர்களும், விசேடமாக வடமராட்சிப் பேரன்பினரும் இணைந்து அடியேனைச் சிறப்பித்தமைக்காக எனது உளம்நிறை நன்றிகள்; வணக்கங்களைத் தந்து பணிகிறேன்.

அருளுரை தந்த நல்லை ஆதீனம்
**ஸ்ரீலஸ்ரீ**
**சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகள்**
**சிவ ஸ்ரீ மகாதேவக்குருக்கள்**
இருவரதும் பாதம் பணிகிறேன்.

ஆசியுரை தந்த மூதறிஞர்
**பண்டிதர் மு. கந்தையா**
**கலாநிதி சி. சிவலிங்கராசா**
இருவருக்கும் நன்றி படைக்கிறேன்.

கலந்து சிறப்பித்த கலைஞர்களுக்கும்
அன்பும் நன்றியும் கூறுகிறேன்.

பத்திரிகை மூலம் பாராட்டிய
**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
**வடமராட்சிக் கம்பன் கழகத்தினர்**
பெருநன்றிக்குரியவர்கள்.

ஒலி அமைத்த மனோ லைட் அவர்களுக்கும்
ஒளி அமைத்த கண்ணாவுக்கும்
மனமார்ந்த நன்றிகள்.

நண்பகல் அறுசுவை அன்னம் படைத்த
**உடுப்பிட்டி திரு. தங்கராசா**
பத்தரும், மக்களும் என் பேரன்பையும், நன்றியையும் ஏற்றுக் கொள்வாராக.

(சி/1539)
**தெ. உதயசங்கர்.**

---

## யாழ். கல்வித்திணைக்கள வலயம் 1 இன் நலன்புரிக் கழகத்தின்

# கலை விழா

தலைவர்: திரு செல்லையா மெற்றாஸ்மயில்
(கழகத்தலைவர்)

பிரதம விருந்தினர்: பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(துணைவேந்தர், யாழ். பல்கலைக் கழகம்)

**இடம்: யா/ இந்து மகளிர் கல்லூரி**
**காலம்: 97 - 09 - 14** ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9-30 (இலங்கை நேரம்)

### நிகழ்ச்சி நிரல்:

முற்பகல் 9-30 தமிழ்த்தாய் வாழ்த்து
மாணவர், யா/ இந்து மகளிர் கல்லூரி

9-35 — நாதஸ்வரக்கச்சேரி
நல்லூர் ''ரஜி'' குழுவினர்

10-00 — இசைக்கச்சேரி
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
புகழ் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை
திருமதி சக்திதேவி சிவகுமார்

10-30 — தனி நடனம்
கொக்குவில் கலாபவனம் வழங்கும்
மகேந்திரன் - தபேந்திரனின் நாட்டிய நிகழ்ச்சி
தயாரித்து வழங்குபவர்: திருமதி சாந்தினி சிவனேசன்
விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை

11-00 — இசை நாடகம்
யாழ். திருமறைக்கலாமன்றம் வழங்கும்
'சத்தியவான் சாவித்திரி''

11 - 30 — தலைமையுரை
பிரதம விருந்தினர் உரை
சிறப்புரை: திரு. சு. இரத்தினராசா
கல்விப் பணிப்பாளரும், நலன்புரிக்கழக போசகரும்

கழகத்தினால் அதிர்ஷ்டம் பார்த்து தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசுகள் அன்பளிப்புச் செய்த பிரமுகர்களினால் பரிசு வழங்கல்:

12 - 15 — நாட்டிய நடனம்
நாட்டியகலா கேந்திரம்.
கிருஷ்ணரூபினி சேனாதிராசாவின்
மாணவிகள், உடுவில்

12 - 45 — நன்றியுரை

தவறாது உரிய நேரத்துக்கு சமுகமளித்து
ஆசனத்திற்கு முந்துங்கள்
★ பிரவேசம் இலவசம் ★

**நலன்புரிக் கழகம்**

விளம்பர அன்பளிப்பு:

**யாழ். நகரில் . கஸ்தூரியார் வீதியில்..**

**தரமான ஐஸ்கிறீம் வகைகள்**
**மற்றும் சிற்றுண்டி வகைகளுக்கு**
**அன்றும் இன்றும் என்றும்**
**பெயர் பெற்ற ஒரே நிறுவனம்**

# லிங்கன் கிறீம் ஹவுஸ்

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(49605)

---

# சமய சந்நிதியில்

யாழ்.போதனா வைத்திய சாலையில் அமைந்துள்ள ஞானவைரவர் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

கும்பாபிஷேகத்தை ஒட்டிய கிரியைகள் இன்று ஆரம்பமாகும். நாளை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துவர். (ஐ-15)

★ ★ ★

கத்தோலிக்க மக்களின் புனித யாத்திரைத் தலங்களில் ஒன்றான முகமாலை அன்னை வேளாங்கண்ணி மாதா தேவாலய நவ நாள் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

நவநாள் ஆராதனைகளை முகமாலை பங்குத் தந்தை அருட்திரு அன்ரனிப்பிள்ளை அடிகள் நடத்துவார். (ஐ-117)

★ ★ ★

கல்வியங்காடு வீரபத்திர ஆலய புதிய தேர்த்தரிப்பு மண்டப கலச அபிஷேகம் இன்று காலை 7.30 மணிக்கு ஸ்நபன அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். (இ-3)

## உரும்பிராய் கமநல சேவை

திருநெல்வேலி செப். 12

புனரமைப்புச் செய்யப்பட்ட உரும்பிராய் கம நலச் சேவை கேந்திர நிலையம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கடந்த பல வருடகாலமாக கோப்பாய்ச் சந்திக்கு அருகாமையில் தற்காலிக கட்டடத்தில் இயங்கி வரும் இந்த நிலையம் கோப்பாய் இராச வீதியில் அமைந்துள்ள அதன்சொந்த கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிலையம் இயங்கத் தொடங்கியதும் இப் பகுதி விவசாயிகள் தங்கள் தேவைகளுக்கு அங்கு தொடர்பு கொள்ளலாம். (ஐ-135)

**New Science Academy**
நல்லூர்.

98 ஆம் ஆண்டிற்கான (ஆண்டு 4) புலமைப் பரிசில் பரீட்சையுடன் வகுப்புக்கள்

**ஆரம்பம்:**
**13-09-1997**
ஞாயிறு காலை 9-00 மணி
(49610)

**UNIVERSAL**
**KANTHARMADAM**

**98 ஆம்**
**ஆண்டிற்கான**
(ஆண்டு 4) புலமைப் பரிசில் பரீட்சையுடன் வகுப்புக்கள்
**ஆரம்பம்: 13-09-97**
ஞாயிறு காலை 9 மணி
[49609]

**விக்னா**
**கல்வி நிறுவனம்**
**பொருளியல்**
**திரு. விக்கி**
**A/L Day Class**
ஆரம்பம்: **17—09—97**
(7-00 A. M.)
**98 A/L**
[illegible]
ஆரம்பம்: 14-09-97
(49613) (10-00 A. M.)

---

# இதய அஞ்சலி

## க. சுப்பிரமணியம்

எமது கலாசாலை விரிவுரையாளர்
திருமதி கலாறஞ்சிதம் மகேந்திரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**க. சுப்பிரமணியம்**

சிவப்பேறு அடைந்தது குறித்து எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம்.

அதிபர்,
விரிவுரையாளர்கள்,
உத்தியோகஸ்தர்கள்,
ஆசிரியமாணவர்கள்.

**பலாலி ஆசிரிய கலாசாலை,**
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(சி/1542)

---

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் கணபதிப்பிள்ளை கந்தையா
**(A. K. K.)**

அச்சுவேலி சிறிவிக்கினேஸ்வரா வீதியை பிறப்பிடமாக கொண்ட ஆ. க. கந்தையா அவர்கள் 11-9-97 இல் காலமானார்.

இவர் சரஸ்வதியின் (கனடா) அன்புக்கணவரும் டாக்டர் கருணாநிதி (கனடா), கிருபாநிதி, பதுமநிதி (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், கச்சேரி), ஜெயநிதி, அருள்நிதி(சுவிஸ்), தயாநிதி (கனடா), காலஞ்சென்ற ரூபநிதி, கங்காநிதி (டென்மார்க்), காலஞ்சென்ற நவநிதி, சங்கநிதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தவேஸ்வரி (கனடா), அனுராதா, மல்லிகாதேவி, வசந்தகுமாரி, மகேஸ்வரி (சுவிஸ்), கோகிலா (கனடா), கலைமதி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும், யாழினி, இளங்கோ, சங்கீதன் சாரங்கன், வாகீசன், காருண்யா, மாதங்கன், சியாமா, விநோதன், கயானி, திருமாறன், ரூபஜெனா, நிரூபன், கீர்த்தனா, சாருசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-9-97) பிற்பகல் 1.00 மணிக்கு எனது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
க. பதுமநிதி
(மகன்)

பயிற்றோலை,
அச்சுவேலி தெற்கு.
(49612)

## பாலசுந்தரம் ஞானசண்முகன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் ஞானசண்முகன் 3-09-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோப்பாய் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். பாலசுந்தரம், திருமதி பாலசுந்தரம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், கட்டுவன் விமலாதேவியின் அன்புக் கணவரும், நரேஸ் (பொறியியலாளர், லண்டன்), சாமினி (வைத்திய கலாநிதி, லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற எஸ். சுந்தரம்பிள்ளை, திருமதி சு. அழகம்மா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
வை. செல்லம்மா
(மாமியார்)
சு. தளையசிங்கம்
(சகலன்)

உரும்பிராய்தெற்கு,
உரும்பிராய்.
(49014)

## கனகசபாபதி சிறிதரன்
(அருள்—லண்டன்)

கனகசபாபதி சிறிதரன் 5-9-1997 வெள்ளிக்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி, அம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், மனோகரி (லண்டன்)யின் அன்புக் கணவரும், நிரூபன் (லண்டன்) சாம்பவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிகரன் (பரன்; கிராமசேவையாளர், ஸ்கந்தபுரம்) வாணி, தமிழ்ச்செல்வி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேஸ்வரன், சிவனேசன் (லண்டன்), நிர்மலா ஆகியோரின் மைத்துனரும், பிரசன்னா, பிரதீப், ஹரி (லண்டன்), மேனகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11 - 9 - 97 அன்று லண்டனில் நடைபெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
தா. மகேஸ்வரன்
(மைத்துனர்)
ஈஸ்வர் கோப்பரேஷன்

21 A, சிவப்பிரகாசம் றோட்,
வண்ணார் பண்ணை.
(49608)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கத்தா நகரில் தீவிர பாதுகாப்பு!

கல்கத்தா, செப். 12

அரச மரியாதைகளுடன் நாளை நடைபெறவுள்ள அன்னை தெரெஸாவின் இறுதிச் சடங்கை ஒட்டி கல்கத்தாவில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இறுதிச் சடங்குகளையும், இறுதி ஊர்வலத்தையும் பார்ப்பதற்காக சுமார் 10 லட்சம் மக்கள் கல்கத்தா நகரில் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

நகர வீதிகளில் சுமார் 11 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக கல்கத்தாவுக்கு வருகைதரவுள்ள உலகப் பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த நான்கு நாள்களில் மூன்று லட்சம் மக்கள் அன்னைக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர். (ஐ)

# பாகிஸ்தான் வெட்டுக் கிளிகள் இந்தியாவுக்குள் படையெடுப்பு!

## அழித்தொழிக்க தீவிர நடவடிக்கை

புதுடில்லி, செப். 12

பாகிஸ்தானில் இருந்து இந்திய எல்லையைத் தாண்டி வெட்டுக் கிளிகள் படையெடுக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான வெட்டுக் கிளிகள் அலை அலையாக எல்லையைத் தாண்டி இந்தியாவுக்குள் பறந்து செல்வது செய்மதி படங்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தின் எல்லையோர மாவட்டங்களில் இந்த வெட்டுக்கிளிகளால் பெரும் அழிவுகள் ஏற்படலாம் என விடுக்கப்பட்ட எச்சரிக்கையைத் தொடர்ந்து வெட்டுக்கிளிகளை அழிப்பதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

பல இடங்களில் பூச்சி மருந்துகள் விசுறப்பட்டு வருகின்றன. (ஐ)

# இத்தாலிய பிரதமரின் இல்லத்தில் தீ!

ரோம், செப். 12

இத்தாலியில் பிரதமர் றோமோனா புரொய்தியின் அரச இல்லத்தில் நேற்று அதிகாலை தீப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்து நடந்த சமயம் பிரதமர் புரொய்தி அவரது சொந்த ஊரில் தங்கியிருந்தார்.

நள்ளிரவுக்குப் பின்னர் அவரது அரச இல்லக் கட்டடத்தில் தீ பற்றியதாகவும், அது பின்னர் அணைக்கப்பட்டுவிட்டதாகவும் ரோம் நகர தீயணைப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ)

## உலக அரங்கில்

# அமெரிக்க செயலர் பேச்சு

ரெல் அவிவ், செப். 12

அமெரிக்க வெளியுறவுச் செயலர் மடலின் அல்பிறைட் மத்திய கிழக்கு சமாதான முயற்சிகள் தொடர்பாக இஸ்ரேலிய, பலஸ்தீனத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளார்.

மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அந்த வட்டாரத்துக்கு இவர் விஜயம் செய்திருப்பது இதுவே முதல் முறையாகும். (ஐ)

## நேரு, காந்தியின் உடல்களைத் தாங்கிய

# வரலாற்று முக்கியத்துவம் மிக்க பீரங்கி வண்டியில் இறுதி பவனி

கல்கத்தா, செப். 12

அரச மரியாதைகளுடனான இறுதிச் சடங்குகளை நடத்துவது என இந்திய அரசு முடிவு செய்திருப்பதை அடுத்து அன்னை தெரெஸாவின் உடலை இந்திய இராணுவம் நேற்று உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டது.

அன்னை இல்ல நிர்வாகிகளிடம் இருந்து அன்னையின் உடலை இராணுவ லெப்டினன்ட் ஜெனரல் விஜயேந்திர சிங் பொறுப்பேற்றார்.

நாளை காலை 9 மணிக்கு சென். தோமஸ் தேவாலயத்தில் இருந்து அன்னையின் இறுதி ஊர்வலம் ஆரம்பமாகும்.

மறைந்த பிரதமர் ஜவகர்லால் நேரு, மகாத்மா காந்தி ஆகியோரது உடல்களை தாங்கிச் சென்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பழைமையான பீரங்கி வண்டியிலேயே அன்னையின் உடலும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படவுள்ளது. (ஐ)

# அன்னைக்கு அரசமரியாதை வழங்குவதற்கு எதிர்ப்பு!

புதுடில்லி, செப். 12

அன்னை தெரெஸாவின் இறுதிச் சடங்குகளை அரச மரியாதையுடன் நடத்துவதற்கு இந்திய அரசு எடுத்த முடிவை ''விஷ்வ இந்து பரிஷத்'' கண்டித்துள்ளது.

ஒரு சமயவாதிக்கு ஏன் அரச மரியாதை வழங்கப்படவுள்ளது என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று இந்து அடிப்படைவாதக் கட்சியான விஷ்வ இந்து பரிவுத்தின் (உலக இந்து சபை) செயலாளர் ஆசார்ய கிரிராஜ் கிஷோர் தெரிவித்துள்ளார்.

அன்னைக்கு இராணுவ மரியாதையோ, அரச மரியாதையோ வழங்கப்படக் கூடாது என்றும் அவர் கூறியதாக ஏ. எப். பி. செய்தி தெரிவித்துள்ளது. (ஐ)

# அன்னை புதைகுழி திருடரால் தோண்டப்படும் ஆபத்துஉண்டு

## அதிமேற்றிராணியார் தகவல்

அன்னை தெரேஸாவின் பூதவுடல் 'மிஸனரி ஒப் சாரிட்டி' எனப்படும்இயக்கத்தின் தலைமையகத்திலேயே நல்லடக்கம்செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

திருடர்களினால் அவரது புதைகுழி தோண்டப்படலாம் என்ற ஐயத்தின் காரணமாகவே அவரது உடலை வெளியிடங்களில் நல்லடக்கம் செய்யாமல் தலைமையக வளாகத்தில் அடக்கம் செய்ய முடிவு எடுக்கப்பட்டதாக கல்கத்தா மேற்றிராணியார் ஹென்றி டிசோஸா தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவ மயானங்களில் உள்ள சவ அடக்கக் குழிகள் திருடர்களால் தோண்டப்படும் சம்பவங்கள் கல்கத்தாவில் அடிக்கடி இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# புகைப்படப்பிடிப்பாளரிடமிருந்து தப்ப நவீன 'லேசர்' கருவி கண்டுபிடிப்பு

## டயானாவின் மறைவை அடுத்து விற்பனைக்கு

நியூயோர்க், செப். 12

புகைப்படப் பிடிப்பாளர்களின் தொல்லைகளில் இருந்து தப்பிக்கொள்ள விரும்பும் பிரபலமானவர்கள் இனிமேல் லேசர் கதிர் ஒன்றின் உதவியை நாடமுடியும்.

பொது இடங்களில் படப்பிடிப்பாளர்களின் அச்சுறுத்தல் அதிகரித்துவரும் இக்கால கட்டத்தில் பிரபலமானவர்களைப் பாதுகாப்பதற்காக அமெரிக்க நிறுவனம் ஒன்று இந்த நவீன லேசர் கருவியை அறிமுகம் செய்துள்ளது.

இந்த நவீன சாதனத்தை ஒருவர் அணிந்து கொண்டால் அது அவரது உடலைச் சுற்றி லேசர் கதிர்களினால் கவசம் ஒன்றை அமைத்துவிடும்.

அவ்வேளைகளில் கமெராக்கள் மூலம் அவரைப் படம் பிடிப்பது சாத்தியமாகாது என்று ''நியூயோர்க் போஸ்ட்'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த லேசர் கருவி ஒன்றின் விலை 70 டொலர்களுக்கும் 400 டொலர்களுக்கும் இடைப்பட்டதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஓராண்டுகளுக்கு முன்னரே இந்த நவீன கருவி கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. ஆனால் அப்போது அது பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஆனால் இளவரசி டயானாவின் அகாலமரணத்தை அடுத்து இந்தக் கருவியை விற்பனைக்கு விட சம்பந்தப்பட்ட நிறுவனம் முடிவு செய்திருக்கிறது.

''பாப்பராஸி'' எனப்படும் புகைப்படப் பிடிப்பாளர்களின் அத்துமீறிய செயல்களே இளவரசியின் மரணத்துக்குக் காரணம் என்று குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ)

# சீனாவில் இன்று 15 ஆவது காங்கிரஸ் மாநாடு

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 15 ஆவது காங்கிரஸின் மாநாடு இன்று ஆரம்பமாகவுள்ளது.

இம்மாநாட்டில் சீன நிர்வாகத்தில் மிகப் பெரும் பதவி மாற்றங்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பல பதவி மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ள போதிலும் ஜனாதிபதியும் கட்சித் தலைவருமான ஜியாங் செமின் தொடர்ந்து அதே பதவிகளையே வகிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் லீ பெங்கின் பதவிக் காலம் முடிவடையவுள்ளது. இவருக்குப் பதிலாக புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் இவர் தொடர்ந்து முக்கிய பதவி வகிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# பிரான்ஸ் ரயில் விபத்தில் 12 பேர் பலி

பாரிஸ், செப். 12

பிரான்ஸில் பயணிகள் ரயில் ஒன்று ரயில்வே கடவையில் எண்ணெய் ட்ரக் வண்டி ஒன்றுடன் மோதியதில் 12 பேர் பலியாகினர்; 34 பேர் காயமடைந்தனர்.

பிரான்ஸின் தென்மேற்குப் பகுதியில் உள்ள சென். அன்டொய்ன் டு புரூ இல் என்ற நகரப் பகுதியிலேயே இந்த விபத்து இடம் பெற்றது. (ஐ)

# மத்தியப் பிரதேச மாநிலத்தில் பஸ் விபத்தில் 50 பேர் பலி!

புதுடில்லி, செப். 12

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலத்தில் றைகேட் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற பஸ் விபத்தில் குறைந்தது 50 பேர் உயிரிழந்தனர்.

றைகேட்டில் இருந்து 50 கிலோ மீற்றர் தூரத்தில் நீர் நிறைந்து காணப்பட்ட ஓடை ஒன்றினுள் தனியார் பஸ் வீழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டது.

அந்த பஸ்ஸில் சுமார் 80 பயணிகள் பயணஞ் செய்தனர். அவர்களில் 25 பேர் கிராம மக்களால் காப்பாற்றப்பட்டனர். (ஐ)

# கருணாநிதி கவலை

சென்னை, செப். 12

விசாரணைக்காக காவலில் வைக்கப்பட்டிருக்கும் போது கைதிகள் எவராவது இறக்க நேரிட்டால் பொலிஸ் உயரதிகாரிகளே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரிகளின் மாநாடு ஒன்றை சென்னையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது போன்ற மரணங்கள் நிகழக்கூடாது எனப் பல முறை அறிவுறுத்தப்பட்ட போதும் அத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவது ஆழ்ந்த கவலை அளிப்பதாக அவர் தெரிவித்தார். (ஐ)

# விபத்தின் போது டயானா ஆசனப்பட்டி அணியவில்லை

பாரிஸ், செப். 12

விபத்தில் சிக்கிய காரில் பயணம் செய்து கொண்டிருந்த சமயம் இளவரசி டயானா ஆசனப்பட்டியை அணிந்திருக்கவில்லை என்பதை பொலிஸ் அறிக்கைகள் உறுதி செய்துள்ளன.

அந்தக் கார்விபத்தில் உயிர் தப்பிய ஒரேயொரு நபரான டயானாவின் மெய்ப்பாதுகாவலர் மட்டுமே ஆசனப் பட்டியை அணிந்திருந்தார் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விபத்தின் போது டயானாவின் கழுத்தில் 20 லட்சத்து 50 ஆயிரம் பிராங் பெறுமதி வாய்ந்த அட்டியல் ஒன்று காணப்பட்டதாகவும்—

அது அவருக்கு அவரது நண்பரான டோடிஅல்பெய்ட்டினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது என்றும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (ஐ)

# ஹங்கேரி நாட்டுக்குள் நுழைந்த 14 இந்தியர்கள் கைது!

ஜீவ், செப். 12

உக்ரேய்ன் நாட்டு எல்லை ஊடாக ஹங்கேரிக்குள் சட்ட விரோதமாக நுழைந்த 14 இந்தியர்களை ஹங்கேரிய அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளியேற்றியுள்ளனர்.

கார் டயர்கள் மூலம் கரையோர நதி ஒன்றை நீந்திக் கடந்த இவர்கள் ஹங்கேரிக்குள் நுழைந்தபோது பிடிபட்டனர்.

அவர்கள் அனைவரும் ஜேர்மன் செல்ல விருப்பம் தெரிவித்த போதிலும் ஹங்கேரிய அதிகாரிகள் அவர்களை உக்ரேய்னுக்கே திருப்பி அனுப்பிவிட்டனர்.

ஆசிய நாட்டவர்கள் உக்ரேய்ன் ஊடாக ஹங்கேரிக்குள் செல்லும் சம்பவங்கள் பல சமீபகாலமாக இடம்பெற்றுள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோருவதற்காக அந்த நாடுகளுக்குள் செல்லும் மார்க்கமாக உக்ரேய்ன் விளங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி

## அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் திருவிளக்கு (சுமங்கலி) பூஜை

அன்புடையீர்!

எதிர்வரும் 16. 09. 97 செவ்வாய்க்கிழமை பூரணை அன்று (போயா தினம்) பிற்பகல் 2. 30 மணிக்கு மாதரசிகள் பங்கு கொள்ளும் திருவிளக்கு (சுமங்கலி) பூஜை நடைபெற அன்னை துர்க்காதேவி திருவருள் கூடியுள்ளதால்

இப்பூஜையில் பங்கு கொள்ளும் மாதரசிகள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

ப. மகாகணபதிசர்மா
தர்மகர்த்தா
(49588)

## ஓராண்டு கால நீங்காத நினைவுகள்



மண்ணுலகம்: 31 — 03 — 1931

விண்ணுலகம்: 12 — 09 — 1996

### அமரர் செல்லப்பா தேவதாசன்

**1997 - 09 - 12**

ஒருகணம் திகைத்து மறுகணம் விறைத்து
அடுத்தகணம் விம்மி வெடித்தழுது உங்களைக்
கண்முன் நிறுத்துகிறோம். ஆனால் நீங்கள் ...?
ஏன் மறுக்கிறீர்கள் எங்களுடன் வருவதற்கு
வாருங்கள் எங்களோடு வாருங்கள்!

மனைவி, மகள், சோதரி,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நவாலியூர் தெற்கு,
மானிப்பாய்.
[49583]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் சிறிஸ்கந்தராஜா றமேஸ்குமார்

(யூனியன் கல்லூரி ஆண்டு 11 மாணவன்)

பிறப்பு: **12- 06- 1979** இறப்பு: **12- 09- 1995**

அன்பின் உறைவிடமே றமேஸ்!
நீ எங்கேயடா போனாய்?
உந்தன் அன்புக்காய் தவம்
கிடக்கும் எங்களை விட்டு விட்டு
எங்கு தான் சென்றாய்?

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள், உறவினர்கள்,

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.
(49537)

## கோழிகளுக்கு தூங்கல் நோய்

உரும்பிராய், செப். 12

வெப்பம் அதிகரித்துள்ளதால் பல இடங்களில் கோழிகள் தூங்கல் நோயினால் பீடிக்கப்படுகின்றன. உரும்பிராய்ப் பகுதியில் பல மாதங்களாக நோய்த்தடுப்பூசி கோழிகளுக்கு ஏற்றப்படவில்லை. இதனால் கோழிகளிடையே தூங்கல் நோய் மேலும் பரவும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

(ஐ-154)

## குளங்கள் புனரமைப்பு

தென்மராட்சி, செப். 12

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சின்னத்தூவில் குளம், எருக்கலம் குளம் ஆகியவை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உதவியுடன் சுமார் ஆறு லட்சம் ரூபா செலவில் ஆழமாக்கப்பட்டு வருகின்றன.

இக் குளங்களின்அபிவிருத்தி வேலைகள் 60 வீதம் பூர்த்தியடைந்துள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்தார்.

(ஐ-117)

## புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 12

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழாவினை ஒட்டி புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நேற்று பிற்பகல் 12.30 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கண்காட்சி நடைபெறவிருந்தது.

இன்று காலை 9.00 மணிக்கு அச்சுவேலி மகா வித்தியாலயத்திலும்—

எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் — கண்காட்சி நடைபெறும். அத்தியார் இந்துக்கல்லூரியில் புத்தகக் கண்காட்சியைத் தொடர்ந்து கருத்தரங்கும் இடம் பெறும்.

(ஐ-5)

## வடமராட்சியில் வீதிகள் திருத்தம்

செம்பியன்பற்று, செப். 12

வடமராட்சிப் பகுதியில் உள்ள பிரதான வீதிகள் சில திருத்தப்படுகின்றன. பருத்தித்துறை- மருதங்கேணி வீதியில் பருத்தித்துறையில் இருந்து வல்லிபுரக் கோயில் வரையான பகுதி திருத்தப்பட்டுள்ளது.

மந்திகைச் சந்தைப் பகுதியேயில் உள்ள வீதியும் தற்பாது திருத்தப்பட்டு வருகிறது. இந்த வீதி முன்னர் குண்டும் குழியுமாகக் காணப்பட்டது.

(ஐ-36)

## நெடுந்தீவில் ச. ச. நிலைய சமாஜம்

நெடுந்தீவு, செப்.12

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஆறு சனசமூக நிலையங்களை உள்ளடக்கிய சனசமூக நிலையங்களின் சமாஜம் கடந்த மாத இறுதியில் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கே. கிருஷ்ணசாமி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

(ஐ-111)

## இன்று விவசாயிகள் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், செப். 12

விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் ஓகஸ்ட் மாதத்துக்கான கொடுப்பனவு இன்று வெள்ளிக்கிழமை கமத்தொழில் [illegible] அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச்சங்கம் பகிரங்க ஏல விற்பனை

### பாவனைக்கு உதவாத தளபாடங்கள்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை பழைய இடத்தில் இயங்கி வருகின்றது. பாவனைக்கு உதவாத மரத்தளபாடங்கள் 28 - 09 - 1997 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வைத்தியசாலை வளவில் வைத்து ஏலத்தில் விடப்படவுள்ளன.

அப்பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் வைத்தியசாலையில் காலை 9-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை பார்வையிடலாம்.

தலைவர்,
பணிப்பாளர் சபை.

01 - 09 - 97
(49460)

## இன்று போல் ஆறுமாதம்.!



### செல்வன் ஜனனன் இரத்தினகோபால் (சிவபாலன்)

(யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி 7 ஆம் ஆண்டு மாணவன்.)


மலர்வு: **17 - 07 - 1985** உதிர்வு: **12 - 04 - 1997**

அன்புச் செல்வனே! மாதம் ஆறு சென்றதடா
உன் அழகு முகம் எம் நெஞ்சினிலே அணையாத் தீபமடா!
அம்மாவின் கண்களிலே வற்றாத கங்கையடா!
அப்பாவின் நெஞ்சினிலே ஆறாத் துயரமடா!
எங்கள் உயிர் இவ்வுலகில் உள்ளவரை உன்நினைவு
எம் நெஞ்சைவிட்டு நீங்காது செல்வமகனே.

உன் பிரிவால் வாடும்:
உன் அன்பு அம்மா,
அப்பா, சகோதரர்கள்.

99/6, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(49604)

## 5 ஆம் வருட நினைவலைகள்



தோற்றம்: 09 — 08 — 1924

மறைவு: 06 — 09 — 1992

### திருமதி சிவகுருநாதன் தவமணி

**திதி: 12 - 09 - 97**

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
உங்கள் நினைவு எம்மை
விட்டகலாது; நெஞ்சில் என்றும்
நிறைந்து நிற்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்புக் கணவன், பாசமிகு பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

102, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(49565)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கு மனித நேயத்தை ஊட்டும் களம் பாலர் பாடசாலை

## திறப்பு விழாவில் உரை

சிறார்கள் மனித நேயம் மிக்கவர்கவர்களாக வளரும் சூழலை பாலர் பாடசாலை கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

பருத்தித்துறை 'கோல்டின் பிளாஸ்' விளையாட்டுக் கழகம் ஆரம்பித்துள்ள பாலர் பாடசாலையின் திறப்பு விழாவில் உரையாற்றிய இளைப் பாறிய மக்கள்வங்கி முகாமையாளர் வி. கே. ஏரம்பமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

திறப்பு விழாவுக்கு கோல்டின் விளையாட்டுக் கழகத் தலைவர் இரா. செந்தில் குமரன் தலைமை வகித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

சிறுவர்கள் நாளைய சமுதாயத்தின் தூண்கள். ஆரோக்கியமான சமுதாயத்துக்கான அத்திவாரம் பாலர் பாடசாலைகளில் தான் இடப்படுகின்றன. எனவே பாலர் பாடசாலை நிர்வாகத்தினர் பொறுப்புடன் நடந்து கொள்வது அவசியமாகும்-என்றார்.

(ஐ-15)

## சங்கானை செயலகப் பிரிவில்

# மேலும் 300 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

வட்டுக்கோட்டை, செப். 12

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் மேலும் 300 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்குவதற்குரிய பட்டியல்களும், காசோலைகளும் சம்பந்தப்பட்ட வங்கிக்கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அராலிமேற்கு, அராலி கிழக்கு, வட்டு.மேற்கு, வட்டு. தென்மேற்கு, பொன்னாலை ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள ஒருதொகுதி குடும்பங்களுக்கே இக் கொடுப்பனவுகள் கிடைக்கவுள்ளன.

இக்கொடுப்பனவுகளுடன் சேர்த்து இதுவரை வலி, மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டாயிரத்து 315 குடும்பங்கள் இக் கொடுப்பனவைப் பெற்றுள்ளன.

இப்பிரதேசத்தில் ஏறக்குறைய பத்தாயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இவர்கள் அனைவருக்கும் படிப்படியாகக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

(ஐ-12)


## யா\ மகளிர் கல்லூரி, சாவகச்சேரி.

## பரிசளிப்பு வைபவம்

தவிர்க்க முடியாத காரணத்தினால் எமது பரிசளிப்பு வைபவம் இன்று (12 - 09 - 97) பி. ப 1-30 மணிக்கு (புதிய நேரம்) நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

—அதிபர்

யா/ மகளிர் கல்லூரி,
சாவகச்சேரி.

(49698)



## இருவிழிகளும் இமைக்க மறந்த ஈராண்டு நினைவலைகள்



ஓரடி மண்ணில்: 25 — 01 — 1963

ஆறடி மண்ணில்: 12 — 09 — 1995

## செல்வி சாந்தி மகேந்திரன்

(B.A., Trained)

[ஆசிரியை, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை.]

ஈராண்டும் எங்ஙனே சென்றதம்மா!
பூத்துக் காய்த்துக் கனிவாய்
என்றுதான் காத்திருந்தோம்
காலனது கணக்கேட்டில்
பதிவுதான் முந்தியதோ!
கண்ணில் தெரியுமும்முருவம்
கண்ணீரைத்தான் வரவழைக்கிறது
விதி வலிது தெரிகிறது
ஆனாலும் மனம் பேதலிக்கிறது
மீண்டொருகால் சாந்தியென
விரைந்து வாரீரோ பாரிற்கு...?

உம்பிரிவால் என்றும் துயருறும்:
குடும்பத்தினர்

அச்செழு,
நீர்வேலி.

(29544)


## மட்டக்களப்பு சாராய மரணங்கள்:

# விசாரணை கமிஷன் நிறுவுவதுபற்றி நாடாளுமன்று இன்று விவாதிக்கும்

கொழும்பு, செப். 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் கலப்படம் செய்யப்பட்ட சாராயம் குடித்து மக்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக தனிநபர் விசாரணைக் குழு ஒன்றை நியமிப்பது தொடர்பாக இன்று நாடாளுமன்றத்தில் ஒருமணி நேரம் விவாதம் நடைபெறவிருக்கிறது.

நாடாளுமன்றத்தில் இன்று ஒத்திவைப்புப் பிரேரணை நேரத்தில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கே. துரைராஜசிங்கம் இது தொடர்பான பிரேரணையை கொண்டுவரவிருக்கிறார்.

இந்தப் பிரேரணை மீது ஒரு மணி நேரம் விவாதம் நடைபெறும் என்று கூட்டணிப் பிரமுகர் தெரிவித்தார்.

அதே நேரம் —

கடந்த செவ்வாயன்று ஜனாதிபதியைச் சந்தித்த சமயம் கூட்டணித் தூதுக்குழுவினர் தனிநபர் விசாரணைக் குழு தொடர்பாக பிரஸ்தாபித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலீஸாரும், மதுவரித் திணைக்களமும் தனித்தனியாக விசாரணை செய்து வருவதாகவும் —

அவர்களின் அறிக்கை கிடைத்த பின்னர் தனிநபர் விசாரணைக்குழு நியமிப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும் என்றும் — ஜனாதிபதி தெரிவித்தார்.

(இ-21-3)

## சந்நிதிக்கு விசேட மினி பஸ் சேவை

தென்மராட்சி, செப். 12

தொண்டமானாறுசெல்வச் சந்நிதி முருகன் ஆலய தேர், தீர்த்த உற்சவ தினங்களில் தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர் விசேட பஸ்சேவைகளை சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து இரு மார்க்கங்களில் நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரியிலிருந்து நுணாவில், கனகன்புளியடி, புத்தூர், அச்சுவேலி ஊடாகவும், கொடிகாமம், வரணி, நெல்லியடி, வல்லை ஊடாகவும் சந்நிதிக்கு விசேட பஸ் சேவைகள் நடைபெறும்.

(ஐ-117)

## யுனெஸ்கோ கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 12

யாழ். கல்வி வலயம் ஒன்றில் உள்ள ஆரம்பப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளின் பகுதித் தலைவர்களுக்கான யுனெஸ்கோ கருத்தரங்கு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருப்பதாக கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராஜா அறிவித்துள்ளார்.

(ஐ)

## அபிராமியந்தாதி 100-வதுபாடல் வெளியீடு

சுழிபுரம் செப் 12

அபிராமியந்தாதி நூறு பாடல்களின் ஆய்வுரைக் கருத்தைத் தொடர்ச்சியாக வெளியிட்டு இலவசமாக விநியோகித்து வந்த வழக்கம் பரை பஜனைச் சபையினர் நூறாவது பாடல் வெளியீட்டை இம் மாத இறுதியில் செய்யவுள்ளனர். நூறு பாடல்களும் தனித்தனியாகவும் இரண்டு பாடல்களாகவும் மொத்தம் எழுபது பிரசுரங்களாக வெளியிட்டுள்ளன.

வெளியீடு செய்யப்பட்ட பிரதிகள் தேவையானவர்கள் பஜனைச் சபையினருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

(ஐ-28)

# வலிகாமம் மேற்கில் சைக்கிள் இலக்கத் தகடுகள் விநியோகம்

வட்டுக்கோட்டை, செப். 12

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலகங்களில் 1997 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டிகள், மாட்டு வண்டிகள், வளர்ப்பு நாய்களுக்குரிய வரி இலக்கத்தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

உரிய வரியைச் செலுத்தி இலக்கத் தகடுகளைப்பெற்று வரி இலக்கத்தகடுகள் இன்மையால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பிரதேச சபை செயலாளர் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளார்.

(ஐ-12)


## வாழ்த்துகின்றோம்

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
5 ஆம் ஆண்டு
புலமைப்பரிசில் பரீட்சை 1995
176 புள்ளிகள் பெற்று மாவட்டத்தில் 5 ஆம் இடத்தையும்
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
ஆங்கில தினப் போட்டி
மாவட்ட மட்டம் - 1997
எழுத்துப்பிரிவில் முதலாம் இடத்தையும் பெற்ற
**செல்வி தர்மலிங்கம் கார்த்திகா**

அவர்களையும், நெறிப்படுத்தியபெற்றோர், அதிபர்கள், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மகேஸ்வரன் மாமா குடும்பத்தினர்

வதிரி

[சி/1537]



யாழ்- போதனா வைத்தியசாலை
அருள்மிகு
## ஞானவைரவர் தேவஸ்தானம்
### புனராவர்த்தன பிரதிஷ்டா
## மஹா கும்பாபிஷேகம்

**கிரியா நிகழ்ச்சிகள்**

கிரியாரம்பம்: இன்று 12-09-97
வெள்ளி பிற்பகல் 2 மணி 15 நிமிடம் அளவில்
எண்ணெய்க்காப்பு: 13-09-97
சனி காலை 8 மணி முதல் மாலை 5மணி வரை.
கும்பாபிஷேகம்: 14-09-97 ஞாயிறு
காலை10 மணி 21நிமிடம் முதல் மாலை 5மணிவரை.
விசேட சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும்

- பரிபாலனசபை

(சி-1536)



## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
வருடாந்த
## இல்ல மெய்வல்லுநர் போட்டி 1997

காலம்:- 13 - 09 - 1997 சனிக்கிழமை
பிற்பகல் 1 - 30 மணி

பிரதம விருந்தினர்:
திரு. க. சண்முகநாதன்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

பரிசில் வழங்குபவர்:
திருமதி சுபத்திராதேவி சண்முகநாதன்

பெற்றோர், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் வருகைதருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
97 - 09 - 10

(சி-1535)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

6, 7, 8, 10 முழங்களில் வைரமான பனைமரங்களும், 5 அடி தொடக்கம், 20 அடி வரை நீளமான 6X2, 6X4, 6X5, 5X2, 5X4, 8X5 ஆகிய அளவுகளில் தீராந்திகளும், சிறுதொகை ஓடுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு; சு. சாயாபதி, சாயாபதிகடை, (பங்களாஒழுங்கை முன்னால்) காங்கேசன் துறை வீதி, மல்லாகம். [49418]

இல. 07, பிரப்பங்குளம் வீதியில் 2¾ பரப்புக்காணியுடன் கூடிய வீடு, சகல வசதிகளுடனும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: 126/10, இந்துமகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. யாழ்ப்பாணம். [49601]

கடைக்குத் தேவையான இரும்பு விறாக்கி (20அடிX 5 அடி) மற்றும் மரத்தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:பழனிதுரை, இல. 101, KKS. வீதி, யாழ்ப்பாணம். [49561]

### வீடு விற்பனைக்கு

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக 1½ பரப்பு காணியுடன் வீடு, வளவு (சகல வசதிகளையும் கொண்டது) உடனடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ''அபிராமி விலாஸ்'' (யாழ். பல்கலைக்கழகம் முன்பாக) 212, சேர். பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி. (49569)

### தவறிவிட்டது

கோபாலசிங்கம் சுபத்திரா ஆகிய எனது விசேட அடையாள அட்டையும், பாடசாலை அடையாள அட்டையும் நல்லூர் கோயிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நாகம்மாள் கோயிலடி, அராலி மத்தி, வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு அறியத் தரவும். [49597]

கந்தசாமி பற்குணவதி ஆகிய எனது 716351289V இலக்க தேசிய அடையாள அட்டையும், 090406959 இல. விசேட அடையாள அட்டையும் நல்லூர் கோயிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நாகம்மாள்கோயிலடி, அராலி மத்தி, வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு அறியத் தரவும். [49596]

ஆவரங்கால் புத்தூரைச் சேர்ந்த கார்த்திகேசு குமாரசாமி என்பவரது இலக்கம் 190880079V கொண்ட தேசிய அடையாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டை யாழ் நகர்ப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும் .10 ஆம் கட்டை, ஆவரங்கால், புத்தூர். [49603]

## உள்ளூர் திராட்சை

தென்மராட்சி, செப். 11

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் உள்ளூர் திராட்சைப்பழம் சாவகச்சேரி சந்தையில் விற்பனை செய்யப்பட்டது.

கிலோ 140 ரூபாவுக்கு விற்கப்பட்ட இந்த திராட்சைப் பழம் வலிகாமம் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டது. (இ-117)

## அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 12

ஜே — 67 திருநகர் பிரிவு அடையாள அட்டைகள் சின்னக்கடை இராணுவ முகாமில் வைத்து நாளை சனிக்கிழமை காலை 9- 30 மணிக்கு வழங்கப்படும். (ஐ-5)

---

உ

சிவமயம்

### வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோயில்

(பன்றிக் கோட்டுப்பிள்ளையார் கோயில்)

### இராஜ கோபுர மகாகும்பாபிஷேகம்

07-09-97 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த மகாகும்பாபிஷேகம் 14-09-97 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு நடைபெறும்.

தர்மகர்த்தாசபை

(49602)

---

## கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

### டிப்ளோமா

### மனைப்பொருளியலும் கைத்திறனும்

★ கேக் ஐஸிங்
★ உடை தயாரித்தல்
★ உணவு தயாரித்தல்
★ கை வேலை
★ பூ வேலை

● மேற்படி டிப்ளோமாப் பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், முக ஒப்பனை, கோலம் வகுப்புக்கள் நடைபெறும்.

● பயிற்சிக் காலம் 6 மாதம்.

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்: 14-09-97**
காலை 9.00 மணி

**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்: 15-09-97**
காலை 9.00 மணி

(சி/1534)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

மண்ணில்: **20 - 06 - 1931**

விண்ணில்: **14 - 08 - 1997**

அன்பின் உறைவிடமே!
பாசத்தின் திருவுருவே!
உன் ஆன்மா இறைவன்
திருவடியில் அமைதி பெறுவதாகுக.

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தியை அறிந்து நேரில் வந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், வேறு வழிகளில் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றியைக் கூறுகின்றோம்.

13 - 09 - 1997 (சனிக்கிழமை) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், அன்று நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

பாடசாலை வீதி,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

([illegible])

---

உ

சாவகச்சேரி

அருள்மிகு

## ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்

## நன்றி நவிலல்

அன்புடையீர்!

மேற்படி தேவஸ்தானத்தில் 05-09-97 வெள்ளிக்கிழமை அன்னை துர்க்காதேவிக்கு சிறப்பாக நடைபெற்ற மஹா கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த அந்தணப் பெருமக்கள், நல்லை ஆதீன முதல்வர், உபயகாரர், நாதஸ்வரக்கலைஞர்கள், திருப்பணிக்கு உதவிய அம்பிகை அடியார்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வர்த்தகப் பெருமக்கள், நகரசபை செயலாளர், தொண்டர்கள் எமது அழைப்பை ஏற்று பெரும் திரளாகவந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னை துர்க்காதேவியின் திருவருளும் கிடைக்க அன்னையைப் பிரார்த்திக்கின்றோம்,

நன்றி.

ப. மகாகணபதிசர்மா
தர்மகர்த்தா

(49589)

---

உ

ஓம் சாயிராம்

### வடபிராந்திய சத்தியசாயி சேவா நிலையங்கள் இணைந்து நடத்தும்

## மனித மேம்பாட்டுக் கண்காட்சி

காலம்:- **14 - 09 - 97** ஞாயிற்றுக்கிழமை
**15 - 09 - 97** திங்கட்கிழமை
காலை 10 மணிமுதல் மாலை 4 மணி வரை

இடம்: ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் த. க. பாடசாலை
நாவலர் வீதி (ஆனைப்பந்தி வைத்தியசாலை அருகாமையில்).

ஆரம்பித்து வைப்போர்:
ஸ்ரீ செ. சிவஞானம் அவர்கள்
(இலங்கையின் மத்திய இணைப்பாளர்)
ஸ்ரீ சு. இரத்தினராஜா அவர்கள்
(கல்விப் பணிப்பாளர் - வலயம் I)
ஸ்ரீ வ. தானையா அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் இலவசம்

— வடபிராந்திய சத்தியசாயி சேவா நிலையங்களின் இணைப்புக் குழு

[49549]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 23 — 02 — 1951



உதிர்வு: 23 — 09 — 1996

### அமரர் கணபதி சிவப்பிரகாசம்

### திதி: 12 - 09 - 1997

எங்கள் தெய்வமே! கடமைகளைத் தாங்கள் நன்றே செய்தீர்கள். சுமைகளை நன்றே சுமந்தீர்கள் இன்பம் அடைகின்ற வேளையில் எம்மைத் தவிக்க விட்டு சென்றீர்களே அப்பா! வழி தெரியாது தவிக்கின்றோம் நாம். தங்கள் நினைவின்றி வாழ முடியவில்லை. உங்கள் ஆத்மசாந்தியே எமது பிரார்த்தனை.

பிரிவால் வாடும்:

மனைவி: சி. புவனேஸ்வரி
மகன்: சி. சிவகுமார் (தபாலகம் கொடிகாமம்)
மகள்மார்: சிவாணி, கோமதி, தர்சினி,
மாமி, மச்சாள். மச்சான், பெறாமக்கள்.

நாகநாதன் வீதி,
கச்சாய் றோட்,
கொடிகாமம்.

(49592)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நெற்செய்கையில் நாட்டமில்லையா?

குடாநாட்டின் பல பகுதிகளிலும் விதை நெல் தேங்கிக் கிடப்பதாக கமநல சேவை நிலைய வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. தமக்கு விதை நெல் தேவையென விண்ணப்பித்தவர்கள் கூட இன்னும் அதனைப் பெறவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் வருடத்தில் ஒரு முறையே நெற்செய்கை செய்யப்படுகிறது, மாரி கால மழையை நம்பியே விவசாயிகள் இந்தக் காலபோகச் செய்கையில் ஈடுபடுவர்.

குடாநாட்டில் கடந்த பல வருடங்களாக உரிய காலத்தில் மழை பெய்வதில்லை. போதியளவுமழைவீழ்ச்சியும் இல்லை. அதனால் நெற்செய்கை லாபகரமானதாக அமைவதில்லை. வீட்டுத் தேவைக்கான அரிசியையாவது பெறும் எண்ணத்துடனேயே குடாநாட்டில் மிகப் பெரும்பாலானோர் நெற் செய்கையில் ஈடுபடுவது வழக்கமாகி விட்டது,

கடந்த வருட நெற் செய்கைக்கு அரச நிறுவனங்களூடாக உரிய காலத்தில் விதை நெல் வந்து சேரவில்லை. மழைபெய்யத் தொடங்கிய பின்னரும் விதை நெல் கிடைக்காது தமது வயல்களைப் பண்படுத்தித் தயார் நிலையில் வைத்திருந்தவர்கள் பெரும் அவதிப்பட நேர்ந்தது.

மிகப் பலரும், தனியார் வியாபாரிகளிடம் அதிக விலையில் விதை நெல்லைக் கொள்வனவு செய்து விதைத்தனர், பல பகுதிகளில் அவை முளை கொள்ளவில்லை. பலர் மீண்டும் விதை நெல் வாங்கி விதைக்கவும் நேர்ந்தது. இந்தக் கஷ்ட அனுபவம் மிகப் பலரை இம்முறை நெற்செய்கையில் ஈடுபடாதிருக்கத் தூண்டியிருக்கலாம்.

மேலும் சென்ற வருட அனுபவத்தை மனதில் வைத்து, இம்முறை பயன்படுத்தவெனப் பலரும் சொந்த விதை நெல்லைச் சேமித்திருப்பார்கள். அதனால் அரசாங்க நிறுவனங்களில் விதை நெல் பெறுவதற்கு விண்ணப்பித்த நெற்செய்கையாளர் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும்.

ஆனால் விதை நெல் கேட்டு விவசாயிகள் சம்மேளனங்கள் ஊடாக விண்ணப்பித்தவர்களும் இன்னும் அதனைப் பெறவில்லை என்பது இம்முறை நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு பலருக்கு நாட்டமில்லையோ என்ற அச்சத்தைத் தருகிறது. கோடை கால மழை இம்முறை முற்றாக வீழ்ச்சி கண்டதால், மாரிமழை பொய்க்கலாம்; நெற்செய்கையில் ஈடுபட்டால் நட்டப்பட நேரிடலாம் என்றும் விவசாயிகள் மத்தியில் அச்சம் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

கப்பல் மூலம் மட்டுமே குடாநாட்டுக்கான உணவுப்பொருள்கள் கொண்டுவரப்படுகின்றன. மாரி காலத்தில் கப்பற்சேவை ஒழுங்காக நடைபெற முடியாமற் போகும் சாத்தியம் நிறையவும் உண்டு. மேலும் தென்னிலங்கையிலும் கடந்த வருடங்களில் நெல்உற்பத்தி குறைந்திருக்கிறது.

இவற்றைக் கருத்திற் கொண்டு, அடுத்த வருடத்தில் குடாநாட்டில் அரிசிப் பற்றாக்குறை உண்டாகி விலையேற்றம் வராமல் தடுப்பதற்கு உதவும் வகையில் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுவது அவசியம்.

தன் கையே தனக்கு உதவி என்பதனை மறந்துவிடலாகாது. மக்களைப் பஞ்சம், பசி தாக்காமல் தடுக்க உதவுவது பெரும் புண்ணியமாகும். இயற்கை அதற்குக் கைகொடுக்கும் எனப் பிரார்த்திப்போமாக.

# தன்னை அணுகியோருக்கே அருள் தருபவன் இறைவன்

கண்ணுக்குப் புலனாவது காட்சி. அது பார்வை எனப்படும். அக் காட்சி அகக் காட்சி, புறக்காட்சி என இரு வகைப்படும். அகக்காட்சி மனம் சம்பந்தமானது. புறக்காட்சி கண்பார்வையுடன் நேரடியாகவே தொடர்பு உடையது. கண்ணும் மனமும் பொருந்திக் காணும் காட்சியே உலகின் வியப்பு மிகு காட்சிக்கு அழைத்துச் செல்லும். ஐம் புலனடக்கம் — மன ஒடுக்கம் என வியக்கச் செய்யும் அவ் வியப்பு பரம்பொருள் என்னும் பேருண்மையைக் காட்டும்.

நாம் எமது அன்றாட வாழ்வில் பல பொருள்களைக் காண்கின்றோம். சில பொருள்களைப் பார்த்ததும் சிந்தனை வயப்படுகின்றோம். சிலவற்றைக் கண்டும் சிரத்தை செய்யாது விட்டுச் செல்கின்றோம்.

ஒரு பொருளைப் பலர் பார்க்கும் போது பல விதங்களிலே பல கோணங்களிலே சிந்தனை செய்கின்றனர். ஒரே பொருள் அவரவர் சிந்தனைக்கேற்ப வெவ்வேறு வகையாகக் காட்சியளிக்கும்.

ஒவ்வொருவரும் என்ன மனநிலையில் ஒரு பொருளை நோக்குகின்றாரோ அவ்வாறே அவருக்கு அது காட்சியளிக்கின்றது.

அப்பர் சுவாமிகள் திருவையாற்றில் மூழ்கி எழுந்து வருகின்றார். அவர் கண்ட காட்சி:

''மாதர்ப் பிறைக் கண்ணியானை...''

ஆணும் பெண்ணுமாக இரு யானைகள் வருகின்றன. அந்தக் களிறும் பிடியும் சிவமும் சக்தியுமாகக் காட்சியளிக்கின்றன. இவ்வாறு அப்பர் திருவையாறுக் கோயிலை நோக்கிச் செல்லும் போது, காணும் காட்சிகள் யாவும் அவருக்குச் சிவமும் சக்தியுமாகவே காட்சியளிக்கின்றன. அவர் பார்வையில் பரம்பொருளைத் தவிர வேறெதுவுமே தோன்றவில்லை. ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் திருவுள்ளம் கொண்டவரன்றோ அவர்.

அதனையே திருமூலரும்—

''மரத்தை மறைத்தது
மாமதயானை
மரத்துள் மறைந்தது
மாமதயானை
பரத்தை மறைத்தது
பார்முதல் பூதம்
பரத்துள் மறைந்தது
பார்முதல் பூதம்''

— என்றார்

மரத்தினால் செய்யப்பட்ட யானை ஒன்றைச் சாதாரண மனிதன் ஒருவன் காண்கின்றான். அப்பப்பா எத்தகைய அழகு என்று யானையின் அழகில் அதன் அமைப்பில் வியக்கின்றான். அதிசயிக்கின்றான். இங்கே யானை தோன்றியது மரம் மறைந்தது.

அதே யானையை ஒரு சிற்பாச்சாரியார் காண்கிறார். அவர் யானையின் எழிலை அதிசயிக்கவில்லை. அந்த யானை எவ்வாறு செய்யப்பட்டது; எந்த மரத்தினால் செய்யப்பட்டது என்றே சிந்திக்கின்றான். இங்கே மரத்தள் மறைந்தது மாமது யானை.

அதே போல நாம் எமக்கு வழிகாட்டி நின்று எம்மை வழிநடத்திச் செல்கின்ற மேலான சக்தியைச் சிந்தித்து நோக்குவோமாயின் எம்மை உலகியல் வாழ்வில் அழுந்தச் செய்யும் மாயைத் தோற்றங்களை நீக்கி மேலான பரம்பொருளைக் காணலாம்.

இவற்றையே எம் ஆலய வழிபாடுகள் விளக்குகின்றன. ஆலயங்களுள் நாம் சென்று எமக்கு மேலான சக்தியைச் சிவனாக உமையாக கந்தனாக கணபதியாக எண்ணி வழிபடும் பொழுது அப்பரம் பொருள் எமக்குக் காட்சியளிக்கின்றது. ஆனால் இதே சிலையைக் கல்லாகவும் மரமாகவும் நோக்குபவன் கண்களில் பரம் பொருள் காட்சியளிக்க முடியுமா?

''நலமிலன் நண்ணினார்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்''

இறைவன் தன்னை அணுகியவர்களுக்கே முத்தி இன்பத்தைக் கொடுப்பான். ஆகவே நாம் நாள்தோறும் எமக்கு மேலாக நிற்கும் பரம்பொருளைச் சிந்தித்து நோக்கி வணங்குவோமாக.

★

— க. மணிமார்பன்.

**ஞானக் கதிர்**

**நாளை**

**ஆவணி 28**

சனிக்கிழமை

திதி: ஏகாதசி

முற்பகல் 10.09 வரை.

நட்சத்திரம்: உத்தராடம்

பிற்பகல் 1.14 வரை.

பரிவர்த்தன ஏகாதசி விரதம்

வாமன ஜயந்தி

சுபநேரம்: 3.03 - 4.33

ராகுகாலம்: 9.03-10.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### விறுவிறுப்பான கிரிக்கெட் ஆட்டத்தில்

# யாழ். பல்கலைக்கழக அணியை சென்றலைட்ஸ் அணி வென்றது!

யாழ்ப்பாணம், செப். 12

டொனால்ட்கணேஷ்குமார் வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் தோற்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் முதல் சுற்றில் யாழ். பல்கலைக்கழக அணிக்கும், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் கடந்த வார இறுதியில் சென் பற்றிக்ஸ்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற விறுவிறுப்பான ஆட்டத்தில் ஐந்தே ஐந்து ஓட்டங்களினால் சென்றலைட்ஸ் அணி வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 49 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160ஓட்டங்களைப் பெற்றது. எஸ். பி. ரஜீவன் 13, விவேகானந்தன் 50, எம். கோகுலரமணன் 16, கே. சண்முகலிங்கம் 38 ஓட்டங்களைப் பெற்றனர்.

என். சுரேஷ்குமார் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஆர். வரதன் 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ரி. நரேஷ் 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 32 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறும் நிலையில் இருந்த போதும்—

இறுதியாகத் துடுப்பெடுத்தாடிய மதியழகன் — ஸ்ரீதரன் ஜோடி இணைந்து நிதானமாக பல்கலைக்கழக அணியின் ஓட்ட எண்ணிக்கையை மெல்ல மெல்ல வெற்றி இலக்கான 161 ஐ நோக்கி நகர்த்தத் தொடங்கியது.

**விளையாட்டு அரங்கு**

என்றாலும் 43 ஓவரில் 155 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அச்சோடியில் ஒருவர் ஆட்டமிழந்ததால்போட்டியில் ஐந்து ஓட்டங்களால் சென்றலைட்ஸ் அணி வென்றது.

இச்சோடியின் நிதானமான — பொறுப்பான — துடுப்பாட்டம், ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தது.

சென்றலைட்ஸ் தரப்பில் தி. அருணோதயன் 44 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், என். நிஷாகரன் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஆர். லக்ஷ்மிகரன் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள் ஆட்ட நாயகனாக கே. விவேகானந்தன் தெரிவானார்.

கிறாஸ் கொப்பர்ஸ் அணிக்கு எதிராக யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்தவார இறுதியில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் பற்றீஷியன் அணி—8விக்கெட்டுக்களினால்-இலகுவாக வெற்றியீட்டியது.

ஓட்ட விவரம் வருமாறு:-

★ கிறாஸ் கொப்பர்ஸ் அணி:- 47 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்கள். (எஸ். கமல்ராஜ் 59, ரி. கிரிதரன் 18 ஓட்டங்கள்., எம். பி. பனிஸ்ரன் 31 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்கள்., ஜே. பி. றோஸ்ரன் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்கள்.

★ பற்றீஷியன் அணி:- இரு

(8 ஆம் பக்கம் பார்க்க)

| அணி | குழு | ஆட்டம் | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| கே. ஸி. ஸி. ஸி. | A | 2 | 2 | — | 7.99 |
| சென்றலைட்ஸ் | B | 2 | 1 | 1 | 6.79 |
| ஜொனியன்ஸ் | B | 2 | 1 | 1 | 6.75 |
| பல்கலைக்கழகம் | B | 2 | 1 | 1 | 6.32 |
| ஜொலிஸ்ரார்ஸ் | C | 1 | 1 | — | 5.01 |
| பற்றீஷியன்ஸ் | C | 1 | 1 | — | 3.60 |
| கிறாஸ்கொப்பர்ஸ் | C | 2 | — | 2 | 3.37 |
| மானிப்பாய் பரிஷ் | A | 1 | — | 1 | 3.13 |
| யூனியன் | A | 1 | — | 1 | 2.20 |

## கப்பல் பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், செப். 12

காங்கேசன் துறையில் இருந்து மன்னாருக்கு நாளை முதல் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை பயணிகள் கப்பல் சேவை நடைபெறும் தினங்களை யாழ் சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

நாளை 13ஆம் திகதியிலும் 16 ஆம், 18 ஆம், 20 ஆம், 23 ஆம் திகதிகளிலும் நடைபெறும் கப்பல் சேவைகளில் பயணம் செய்யவிரும்பும்அனுமதிபெற்றவர்கள் தமதுபதிவுகளை தமது அலுவலகத்தில் மேற்கொள்ளலாம் என மேலும் அந்த அலுவலகம் அறிவித்துள்ளது.

பதிவு செய்தவர்கள் கப்பல் சேவை நடைபெறும் தினங்களில் காலை 8-00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தில் சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## விவசாய பீட விரிவுரைகள் செப். 22இல்

யாழ்ப்பாணம், செப். 12

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் சகல ஆண்டு மாணவர்களினதும் விரிவுரைகள் செப்ரெம்பர் 22 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் சகல மாணவர்களையும் முன்னேற்பாடாக யாழ். நகருக்கு வந்து சேருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## மானிப்பாயில் ஏற்பு ஊசி ஏற்ற வசதி

சண்டிலிப்பாய், செப். 12

மானிப்பாயில் இயங்கி வரும் தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் பொதுமக்கள் ஏற்புத்தடுப்பு ஊசி மருந்து ஏற்ற வசதி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## உரும்பிராயில் 500 வீடுகளுக்கு மின்சாரம்

உரும்பிராய், செப். 12

உரும்பிராய்ப் பிரதேசத்தில் இதுவரை 500 வீடுகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள ஜெனரேற்றர் 400 வீடுகளுக்கு மட்டுமே மின்சாரம் வழங்கக் கூடியதாக இருந்த போதிலும் பொதுமக்கள்தமது பாவனையைக் குறைத்து ஒத்துழைத்து வந்ததனால் இது சாத்தியமானது எனவும், இன்னும் சில வீடுகளுக்கும் மின்னிணைப்பு வழங்கப்படவுள்ளதாகவும் சுன்னாகம் மின்சார சபையைச் சேர்ந்த மின் அத்தியட்சகர் தெரிவித்தார். (ஐ-154)

## சத்திரசிகிச்சை நிபுணர்

யாழ்ப்பாணம், செப். 12

சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் மு. சிவகுமார் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமனம் பெற்றுள்ளார். (இ-3)

## தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம்

யாழ்ப்பாணம், செப். 12

தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம் மீண்டும் இன்று முதல் பழைய இடத்தில் இயங்கவிருக்கிறது.

1990ஆம் ஆண்டு அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த இந்த வித்தியாலயம் பல இடங்களில் செயற்பட்டு வந்தது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடந்த மாதத்துக்கான 6 லீற்றர்

## மண்ணெண்ணெய் பெறாதவர்களை உடன் பெறுமாறு கோரிக்கை

நவாலி, செப். 12

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல குடும்பங்களுக்கும் கடந்த மாதம் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் பங்கீட்டு அடிப்படையில் ஆறு லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

மேற்படி 6 லீற்றர் மண்ணெண்ணெயை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தமது பகுதி ப. நோ. கூ. சங்கத்திலோ அல்லது பிரதேச செயலகத்திலோ முறையிட்டு அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை — இம்மாதத்துக்கான மண்ணெண்ணெய் ஆறு லீற்றர் வழங்கப்படும். 3 லீற்றர் வீதம் இரு கட்டங்களாக ப. நோ. கூ. சங்கம் மூலம் அது விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-100)

## 2 ஆயிரம் கிலோ பனாட்டு கொழும்புக்கு ஏற்றுமதியாகும்

திருநெல்வேலி, செப். 12

யாழ். பனை அபிவிருத்திச் சபை பனாட்டு, பாணிப் பனாட்டு ஆகியவற்றைத் தயாரித்து வருகின்றது.

சிறந்த தொழில் நிபுணத்துவத்துடன் யாழ். நகரிலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்தி நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வரும் இவற்றுக்கு கொழும்பில் நல்ல கிராக்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலுள்ள பனை அபிவிருத்திச் சபை அலுவலகம் இவற்றை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆயிரம் கிலோ நிறையுள்ள பனாட்டையும், பாணிப் பனாட்டையும் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-135)


உ

## அறிவித்தல்

05-09-97 வெள்ளிக்கிழமை தொடக்கம்

எமது ஸ்தாபனம் சில்லறை விற்பனையை ஆரம்பித்துள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
352, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[49607] [தற்காலிக விலாசம்]


## மரண அறிவித்தல்

### கந்தையா சுப்பிரமணியம்

(முன்னாள் உத்தியோகஸ்தர், றோயல் நேவி — திருகோணமலை, ஓய்வுபெற்ற உடுவில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகப் பிரதம லிகிதரும், மருதனார்மடப் பல்லப்பை வைரவர் தேவஸ்தான பரிபாலகரும்)

கொல்லன்கலட்டியை பிறப்பிடமாகவும், உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் 11 - 9 - 97 வியாழக்கிழமை மாலை காலமானார்.

இவர் திருமதி சு. அன்னபூரணம் அவர்களின் அன்புக் கணவனும், திருமதி ஹ. குலறஞ்சிதம் (ஆஸ்திரேலியா), சு. சிவக்குமார் (அபிராமி ரெக்ஸ் யாழ்ப்பாணம்), திருமதி ம. கலாறஞ்சிதம் (விரிவுரையாளர் — பலாலி ஆசிரிய கலாசாலை), திருமதி ப. ஜெயறஞ்சிதம் (L. L. B ஆஸ்திரேலியா), டாக்டர் K. S. பாலகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஹரிச்சந்திரன் (ஆஸ்திரேலியா), மகேந்திரன் (உரிமையாளர் டில்க்கா ஸ்ரூடியோ & கொம்யூனிக்கேசன் யாழ்.), பரமேஸ்வரன் (ஆஸ்திரேலியா), திருமதி சி. சத்தியாதேவி, திருமதி பா. சிவசக்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், வாணி, றமேஸ், அகிலன், அபிராமி (ஆஸ்திரேலியா), ஆதவன் (ஆண்டு-8E மாணவன் யாழ். இந்துக் கல்லூரி), துளசி (மாணவி— ஆண்டு - 5 இராமநாதன் கல்லூரி), நளினி, வதனி (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள்), சாகித்தியன், தாட்சாயினி, சாரங்கன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம், திருமதி நா. அன்னம்மா மற்றும் தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 12 - 9 - 97 வெள்ளிக்கிழமை மாலை 2 மணியளவில் உடுவில் கிழக்கு இராமநாதன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து இணுவில் பூவோடை மயானத்திற்கு தகனக் கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. சிவகுமார் (மகன்)

இராமநாதன் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(சி/1541)

# மன்னார்-காங்கேசன் சேவையில் குட்வில் கப்பலை ஈடுபடுத்த முயற்சி

திருகோணமலை, செப். 12

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட வாடகைக்கு அமர்த்தப்பட்ட ''குட்வில் கைட்'' கப்பலை காங்கேசன்துறைக்கும், மன்னாருக்கும் இடையில் ஈடுபடுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது.

திருமலை — காங்கேசன் துறை சேவைக்கு இக்கப்பல் தரமற்றது என துறைமுக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து இக் கப்பலில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்குடன் கப்பல் காலித்துறை முகத்தில் தரித்துள்ளது.

இக்கப்பலில் தற்சமயம் மேற்கொள்ளப்படும் பணிகளைப் பார்வையிட பொறியியலாளர் குழு ஒன்று இன்று காலிக்கு வர விருக்கிறது.

பயணிகள் சேவையில் ஈடுபடக்கூடிய நிலையை இக்கப்பல் அடைந்த பின்னர் அதை காங்கேசன்துறை - மன்னார் சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது. இ-150-3)

## கிழக்கில் புலிகளின் நீதிமன்றம்

மட்டக்களப்பு, செப். 12

கிழக்கில் முதலாவது தமிழீழ நீதிமன்றத்தை விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் கொக்கட்டிச்சோலை, பட்டிப்பளையில் ஆரம்பித்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நீதிமன்றத்தில் தமது கட்டுப்பாட்டுப் பகுதி வழக்குகள் மட்டுமல்ல ஏனைய வழக்குகளும் விசாரிக்கப்படும் என்று புலிகள் அறிவித்துள்ளனர். (இ-21-3)

## சிறுவனின் உயிர் காப்பு நிதிக்கு 10 ஆயிரம் ரூபா அன்பளிப்பு

தென்மராட்சி, செப். 12

இருதய நோயால் பாதிக்கப்பட்ட மானிப்பாயைச் சேர்ந்த கனகலிங்கம் விமல்ராஜ் என்ற மூன்று வயதுச் சிறுவனின் உயிர் காப்பு நிதிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலய மாணவர்களால் சேகரிக்கப்பட்ட 10 ஆயிரத்து 200 ரூபா மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ஞானராஜிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந் நிதி வழங்கும் வைபவத்தில் மகாவித்தியாலய அதிபர் வே பாலசுப்பிரமணியம், லயன்ஸ் கழக வலயத் தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம், சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பி. விஜயகுமார், மானிப்பாய் கோயில் பற்று லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் பாலகிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-117)

## சுயதொழில் முயற்சிக்கு போரூட் அமைப்பு உதவி

தென்மராட்சி, செப். 12

போரூட் நிறுவனம் பளைப் பிரதேசத்தில் வறியவர்களுக்கான சுயதொழில் முயற்சிக் கடன்களைப் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாகவழங்கவுள்ளது.

கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, வியாபாரம், விவசாயம் போன்ற சுயதொழில் முயற்சிகளுக்கு ரூபா 3 ஆயிரம் தொடக்கம் ரூபா 25 ஆயிரம் வரை கடன் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பச்சிலைப் பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் இப் பகுதியில் உள்ளவர்களுக்கு சுயதொழில் முயற்சி மற்றும் விவசாயம் ஆகியவற்றுக்கு 10 ஆயிரம் ரூபா கடன் வழங்கவுள்ளதாக சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (இ-117)

## வன்னியில் கடும்மழை

வவுனியா, செப். 12

வன்னியில் கடந்த சில தினங்களாக கடும்மழை இடி முழக்கத்துடன் பெய்து வருகிறது.

முத்தையன்கட்டுப் பகுதியில் மின்னல் தாக்கி காயமடைந்த கணவன் - மனைவி ஆகியோர் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3-164)

## சீன அதிகாரிகள் புல்மோட்டை விஜயம்

புல்மோட்டைப் பகுதியில் தாக்குதலுக்கு உள்ளான சீன சரக்குக் கப்பலைப் பார்வையிட கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தின் இரு ராஜதந்திரிகள் நேற்றுப் புல்மோட்டை சென்றனர்.

சீனத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் திருமதி சாங் கியூவா, 3 ஆம் தர அதிகாரி சாங் கூஸ் ஆகியோரே அந்த இருவரும் ஆவர்.

தாக்குதல் தொடர்பாகக் கப்பலின் சிப்பந்திகளிடம் கேட்டறிந்ததுடன் அவர்களின் நலன்களையும் அவர்கள் விசாரித்தனர்.

## மின்மாற்றி தகர்ப்பு

மட்டக்களப்பு மாவட்டம், கல்முனை மருத முனைப்பகுதியில் நேற்று முன்தினம் இரு மின் மாற்றிகள் இனந்தெரியாதவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இதனால் 6 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதுடன் 600 குடும்பங்களுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது. (இ-21-3)

### கப்பல்களை...

(முதலாம் பக்கத் தொடர்)

அளவை நிர்ணயம் செய்வதைக் காட்டிலும், ஒவ்வொரு கப்பலும் தத்தம் கட்டணம் இன்னதென தனிப்பட்ட முறையில் பேசி முடித்துக் கொள்ளவேண்டும் என்றும் அந்த நிறுவனம் கேட்டுள்ளது.

அதேசமயம் வடக்கு-கிழக்கில் தங்கள் எல்லைக்கு உட்பட்ட கடற்பகுதியில் அந்நியக் கப்பல் உள்ளிட்ட எந்தக் கப்பலும் செல்லக்கூடாது என்று விடுதலைப் புலிகள் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்று வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

இந்த எச்சரிக்கையை மீறும் கப்பல்கள் அனைத்தும் தாக்குதல் நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும் என்றும் புலிகள் அச்சுறுத்தியுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் எந்த வெளிநாட்டு அல்லது இலங்கையைச் சேர்ந்த நிறுவனமும் இராணுவத்துடனான நடவடிக்கையில் ஈடுபடுமானால் அது உண்மையான இலக்காகக் கருதப்படும் என்று புலிகள் தெளிவான எச்சரிக்கை ஒன்றை விடுத்திருப்பதாக பி. பி. ஸி. நேற்று இரவு தெரிவித்தது.

தமிழ்ப்பகுதிகளில் இருந்து இயற்கை வளங்களை கொள்ளையடிப்பதற்காக சீன சரக்குக் கப்பல் அரசால் பயன்படுத்தப்பட்டது என்று லண்டனில் உள்ள விடுதலைப் புலிகள் அலுவலக அறிக்கை கூறியது என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது (இ-3)

### புதூர்...

(முதலாம் பக்கத் தொடர்)

33 படையினர் காயமடைந்ததாகவும் அவர்கள் கொழும்பு, அநுராதபுரம் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

படையினர் தரப்பில் 245 பேர் காயமடைந்ததாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

நேற்று இரவு வரையும் புதூர், ஒட்டுசுட்டான் பகுதிகளில் கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்ததாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (இ-164-3)

## குப்பி விளக்கால் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 12

குப்பி விளக்கு தட்டுண்டு தீப்பற்றியும், கொதிநீர் ஊற்றுண்டும் இருவர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவங்களில் மேசையில் இருந்த குப்பி விளக்கு தட்டுண்டு படுக்கையில் இருந்தவர் மீது விழுந்து எரிந்ததில் குருநகர் மவுண்காமல் வீதியைச் சேர்ந்த செல்வநாயகம் சந்திரா (வயது 46) என்பவர் காயமடைந்தார்.

மேசை மீது வைக்கப்பட்டிருந்த கொதிநீர் பாத்திரத்தை இழுத்த போது அது உடலில் ஊற்றுண்டு நல்லூரைச் சேர்ந்த சத்தியசீலன் கிருத்திகா (வயது 1½) என்ற குழந்தை காயமடைந்தது.

இரு சம்பவங்களிலும் காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

## கண்டெடுத்த பணம் ராணுவமுகாமில்

யாழ்ப்பாணம், செப். 12

திருநெல்வேலிப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த இரு பெண் சிப்பாய்களால் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகை பணத்துடன் ஓர் என்பலப்பு திருநெல்வேலி 11 ஆவது கெமுனு ஹேவா கட்டளை தலைமையகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் பணத்தைத் தவற விட்டவர் அடையாளத்தை நிரூபித்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அந்த முகாம் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (இ-3)

### யாழ். பல்கலை...

(ஏழாம் பக்கத் தொடர்)

விக்கெட்டுக்கள் இழப்புக்கு 160 ஓட்டங்கள். (ஏ. எம். லொயாலா ஆட்டமிழக்காமல் 72, ஆர். ஷாஜாகான் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்கள்.

ஏ. எம். லொயாலா ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

(இச் சுற்றுப் போட்டியில் இதுவரை நடைபெற்ற ஆட்டங்களின்படி சுழக அணிகள் பெற்ற புள்ளிகளின் விவரம் 7 ஆம் பக்கத்தில்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12-09-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org